تاميلي

தமிழ்

# أحكام الدماء الطبيعية للمرأة

# பெண்களுக்கு வெளிப்படும் இரத்தம் சம்பந்தமான சட்டங்கள்


ஆசிரியர்:

**கலாநிதி அஷ்ஷெய்க் ஹைதம் முஹம்மத் சர்ஹான்**

முன்னால் மதீனா புனித பள்ளி கலாசாலை ஆசிரியர் ,

மஃஹத் சுன்னாஹ் இணையதள மேற்பார்வையாளர்.



www.alsarhaan.com WWW.MAHADSUNNAH.COM

# பெண்களுக்கு வெளிப்படும் இரத்தம் சம்பந்தமான சட்டங்கள்.

பெண்கள் அடிக்கடி முன்வைக்கும் ஐயங்களில் ஒன்றுதான் அவர்களுக்கு ஏற்படும் இரத்தப்போக்கு சம்பந்தமானது. அது ஏற்பட்டால் தொழுகையை விடலாமா? அல்லது குளித்துவிட்டு தொழ முடியுமா?

**அவற்றில் முதலாவது மாதவிடாய், இது ஒரு இயற்கையாக வெளியேறும் இரத்தம் ஆகும்.**

குறித்த நாட்களில் கர்ப்பப்பையின் ஆழத்திலிருந்து அது வெளிப்படுகின்றது, அதை கர்ப்ப காலத்தில் அல்லாஹ் குழந்தைக்கு ஆகாரமாக மாற்றியுள்ளான்.

ஒரு பெண் எப்போது இவ்விரத்தத்தை காண்பாலோ அது எவ்வித வயது வரையறை இன்றி ஹய்ழ் என கணிக்கப்படும்.

அவ்வாறே, அது நீடிக்கும் கால எல்லைக்கும் வரையறை கிடையாது. பொதுவாக ஒரு பெண் தனக்கு எத்தனை நாட்கள் நீடிக்கிறதோ அத்தனை நாட்களை ஹய்ழ் காலமாக எடுத்துக் கொள்வாள். பெரும்பாலும் ஒரு பெண்ணுக்கு ஆறு அல்லது ஏழு நாட்கள் ஹய்ழ் ஏற்படும், இந்நிலையிலிருந்து சுத்தமாகுவதற்குரிய அறிகுறியாக வெள்ளை நிற பதார்த்தம் வெளியேறுவதைக் காண முடியும்.

இது இரத்தம் முற்றாக நின்றதும் இறுதியாக வெளிப்படும் ஒரு வழுவழுப்பான திரவமாகும். எனினும், சில பெண்களுக்கு இது வெளியேறாவிட்டாலும் இரத்தம் முற்றாக நின்று காய்ந்து விடுமானால் அது சுத்தமாக கணிக்கப்படும்.

மாதவிடாய் ஏற்பட்ட பெண் நோன்பையும், தொழுகையையும் தவிர்ப்பாள். எனினும், நோன்பை மாத்திரம் ஏனைய காலங்களில் நிறைவேற்ற வேண்டும்.

## " இஸ்திஹாழாஃ" தொடர் உதிரப்போக்கு .

இது ஒரு நோய், அதாவது மாதவிடாய் காலத்தையும் தாண்டி தொடர் உதிரப்போக்காகக் காணப்படுவது, இது கர்ப்பப்பையின் அடிப்பகுதியில் உள்ள நாளம் ஒன்றில் ஏற்பட்ட கோளாறு காரணமாக ஏற்படும்.

ஹய்ழ் இரத்தத்திற்கும் இவ்வசாதாரண இரத்தத்திற்குமிடையிலான வேறுபாடு யாதெனில், ஹய்ழ் இரத்தம் தடிப்பான கருப்பு நிறமாக காணப்படும், துர்வாடை வீசும், வெளிப்பட்டால் அது உறையாது. மற்றது மென்மையாகவும், சிவப்பு நிறத்தில் வாடை அற்றதாகவும் காணப்படும். வெளியேறினால் அது உறையாது.

பொதுவாக கர்ப்பப்பையிலிருந்து வெளியேறும் இரத்தம் அனைத்தும் ஹய்ழ் ஆகும், அது தொடர் உதிரப்போக்கு "இஸ்திஹாழாஃ" என தீர்மானிப்பதாயின் அதற்கு ஏனைய புற சான்றுகளை வைத்து தீர்மானிக்க வேண்டும்.

"இஸ்திஹாழாஃ " அசாதாரண இரத்தப்போக்கு ஒரு நோய் போன்றது. எனவே அது ஏற்பட்டால் , ஒரு பெண் தொழுகை, நோன்பு ஆகியவற்றை நிறைவேற்றலாம். தொழுகை நேரம் வந்தவுடன் வுழூ செய்து தொழ முடியும். அதேபோல் ழுஹர், அஸர் தொழுகைகளை ஏதோ ஒரு நேரத்தில் சேர்த்தும் தொழ முடியும். அவ்வாறே மக்ரிப், இஷா இரண்டையும் சேர்த்தும் தொழ முடியும். இப்படிப்பட்ட பெண்கள் அவர்களுக்கு வளமையான ஹய்ழ் ஏற்படும் நாட்களில் மாத்திரமே தொழுகை,நோன்பை தவிர்ப்பர்.

**தொடர் உதிரப்போக்குள்ள பெண்களுக்கு மூன்று நிலைமைகள் உள்ளன:**

01, இந்நிலை ஏற்படுவதற்கு முன், ஹய்ழ் கால எல்லை அறியப்பட்ட பெண். இப்பெண் ஹய்ழ் உடைய நாட்களில் தொழாது இருப்பாள், பின்னர் குளித்த பின் தொழுகையை ஆரம்பிப்பாள்.

02, ஹைழுடைய காலம் அறியப்படாத பெண் , ஆனால் அவளுக்கு இருவகை இரத்தங்களுக்கிடையிலான வேறுபாட்டை அதன் தன்மைகளை வைத்து அறிய முடியுமாக இருப்பின் ஹய்ழ் உடைய இரத்தம் வெளியேறும் நாட்களில் தொழாது இருப்பாள். பின்னர் குளித்த பின் தொழுகையை ஆரம்பிப்பாள்.

03, ஹய்ழ் காலம் அறியப்படாமலும், இரண்டு இரத்தங்களுக்கிடையிலான வேறுபாட்டையும் புரிய முடியாத நிலையில் காணப்படும் பெண்.

இப்பெண் வளமையாக பெண்களுக்கு ஏற்படும் நாட்களான ஆறு, அல்லது ஏழு நாட்கள் ஒவ்வொரு மாதமும் தொழாதிருப்பால். பின்னர் தொழுகையை ஆரம்பிப்பாள்.

## பிரசவ உதிரப்போக்கு.

இதைப் பொறுத்தவரை, பிரசவத்தின் காரணமாக கருவிலிருந்து வெளியேறும் இவ்விரத்தம் எவ்வளவு காலமும் நீடிக்கலாம். எனினும், பெரும்பாலும் 40 நாட்கள் இது நீடிக்கும்.

அன்னை உம்மு சலமா (ரழி) அவர்கள் கூறுகின்றார்கள்:

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் காலத்தில் பிரச உதிரப்போக்குள்ள பெண்கள் 40 நாட்கள் தொழாமல் இருப்பார்கள். (நூல்: அபூதாவூத்:311)

*ஆகவே, பெண்கள் இது சம்பந்தமான சட்ட திட்டங்களை கற்றுக் கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும். தனது வணக்கம், தொழுகை ஆகயவற்றில் கூடிய கவனம்செலுத்த வேண்டும். அப்போதுதான் சுவண்டிகள் நிறைந்த சுவனத்தின் இன்பங்களையும் அல்லாஹ்வின் திருப்தியையும் பெற முடியும்.*